

நிதி ஆணைக்குழுவின்

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - *2022*

செலவினத் தலைப்பு இல. *– 011*

நிதி ஆணைக்குழு

இல: *03*,சரண மாவத்தை ,இராஜகிரிய

உள்ளடக்கம்

பக்க எண்

அத்தியாயம் 01: நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு 1

அத்தியாயம் 02: முன்னேற்றங்கள் மற்றும் எதிர்கால கண்ணோட்டம் 7

அத்தியாயம் 03: 31டிசம்பர் 2022 இல் முடிவடைந்த வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை.. 17

அத்தியாயம் 04: செயலாற்றுகைச் குறிகாட்டிகள் 28

அத்தியாயம் 05: நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றகை 29

அத்தியாயம் 06: மனித வள விபரம் 31

அத்தியாயம் 07: இணக்கப்பாட்டு அறிக்கை 33

அத்தியாயம் – 01: நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு

01. அறிமுகம்

பின்னணி

1987 இல் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பில் பிரகடனப்படுத்தப்பட்ட 13வது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகள் நிறுவப்பட்டதுடன் நிதி ஆணைக்குழுவும் உள்வாங்கப்பட்டது. மேற்கூறப்பட்ட அரசியலமைப்பு ஏற்பாடுகளுள் 154A - 154Q பிரிவுகளிற்கு இணங்க, மாகாண சபைகளின் உருவாக்கம் ஒரு பரந்த நல்லாட்சி நிர்வாக கட்டமைப்பை உருவாக்க அவற்றிற்குரிய தொழிற்பாடுகளுக்குரிய கட்டமைப்புக்களை கொண்டு 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம் இயற்றப்பட்டது.

அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் பட்டியல் I இல் குறிப்பிடப்பட்டுள்ள பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களிலான சேவை வழங்கல்கள் மற்றும் அதே அட்டவணையின் பட்டியல் III இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒத்தியங்கும் பொறுப்பிலான விடயங்கள் ஆகியவற்றுக்கு மாகாண சபைகள் பொறுப்புடையதாகும். மாகாணங்களின் சொந்த வருமானம் மிகக் குறைவாக இருப்பதனால் மாகாண சபைகளின் சேவை வழங்கலுக்குத் தேவையான மிகப்பெரிய வளங்கள் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தேசிய வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து பூர்த்தி செய்யப்படுகின்றன.

நிதி ஆணைக்குழுவின் கட்டளைச் செயல்பாடு

இலங்கை சனநாயக சோசலிச குடியரசினது அரசியலமைப்பின் 154 (R) பிரிவு நிதி ஆணைக்குழுவினை நிறுவுவதற்கான ஏற்பாடுகளை வழங்குவதுடன் நிதி ஆணைக்குழுவின் செயல்பாடுகளையும் விபரிக்கின்றது. அரசியலமைப்பின் உறுப்புரை 154 R (3), (4) மற்றும் (5) பிரிவுகளில் குறிப்பிட்டுள்ளபடி நிதி ஆணைக்குழுவின் கட்டளை செயல்பாட்டு பொறுப்புகள் பின்வருமாறு குறித்துரைக்கப்பட்டுள்ளது.

உறுப்புரை 154R (3) அரசாங்கம் ஆணைக்குழுவினது பரிந்துரைகள் மற்றும் கலந்தாலோசனைகளுடன் மாகாணங்களினது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதுமான நிதியை வருடாந்த வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்யும்.

உறுப்புரை 154R (4) ஜனாதிபதிக்கு பின்வரும் விடயங்களிலில் பரிந்துரை செய்வது நிதி ஆணைக்குழுவின் கடமையாகும்;

அ) அரசாங்கத்தால் மாகாணங்களின் பயன்பாட்டுக்காக வருடாந்தம் வழங்கப்படும் அத்தகைய நிதிகள் தொடர்பாக பல்வேறு மாகாணங்களுக்கிடையே அந்த நிதியினை பகிர்ந்து கொள்வது தொடர்பான நியமங்கள்

ஆ) ஜனாதிபதியால் மாகாண நிதி தொடர்பாக ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏனைய விடயங்கள்.

உறுப்புரை 154R(5) நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்குடன் அத்தகைய கொள்கைகளை நிதி ஆணைக்குழு ஒழுங்கமைப்பதுடன் அதற்காக பின்வருவனவற்றை கவனத்தில் கொள்ளும் ;

அ) ஒவ்வொரு மாகாணத்தின் சனத்தொகை,

ஆ) ஒவ்வொரு மாகாணத்தினதும் தலா வருமானம்,

இ) சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்துக்கொள்வதற்கான முன்னேற்றகரமான தேவைகள் மற்றும்

ஈ) ஒவ்வொரு மாகாணத்தினதும் தலா வருமான வேறுபாடுகளை குறைக்கவும் மகாணங்களிடையே உயர் தலா வருமானத்தை பேணுவதற்குமான முன்னேற்றகரமான தேவைகள்.

அரசியலமைப்புத் தேவைகளுக்கு அமைய நிதி ஆணைக்குழுவால் பரிந்துரைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொண்டு, அதி மேதகு ஜனாதிபதி அவர்கள் பாராளுமன்றத்தில் சமர்பிக்க அனுமதி கோரி அவற்றை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கிறார். அதன்பின்னர் அரசியலமைப்பின் உறுப்புரை 154 R (7) இன் பிரகாரம் நிதி ஆணைக்குழு சமர்ப்பிக்கின்ற பரிந்துரைகள் பாராளுமன்றத்திற்கு ஜனாதிபதியால் முன்வைக்கப்படுகின்றது.

2022 ஆண்டு ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரையிலான காலகட்டத்தில் நிதி ஆணைகுழு உறுப்பினர்கள் பின்வருமாறு இருந்தனர்.

i.	திரு. சுமித் அபேசிங்க	- தலைவர்
ii.	கலாநிதி பி. நந்தலால் வீரசிங்க	-பதவிவழி உறுப்பினர் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்
iii.	திரு. கே.எம். மஹிந்த சிறிவர்தன	-பதவிவழி உறுப்பினர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர்
iv.	திரு.சின்னத்தம்பி சாமித்தம்பி	- உறுப்பினர்
v.	திரு. ரசிக் சரூக், ஜனாதிபதி ஆலோசகர்	- உறுப்பினர்

1.2 நிறுவனத்தின் தொலை நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

நிதி ஆணைக்குழு தனது மூலோபாய திட்டத்தை வகுத்துள்ளதுடன் அதனை 2021 முதல் 2024 வரையிலான காலப்பகுதிக்கு புத்துருவாக்கம் செய்துள்ளதுடன் தொலை நோக்கு, பணிக்கூற்று, முனைவு பகுதிகள் மற்றும் குறிக்கோள்கள் என்பவை இணங்காணப்பட்டு மூலோபாய திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளது .

தொலை நோக்கு

சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியுடனான சுபீட்சமான தொரு இலங்கை

பணிக்கூற்று

நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக தேவைகளை மதிப்பீட்டாய்வு செய்து மாகாணங்களுக்கிடையே நிதியினை பகிர்ந்து கொள்வதற்கான கொள்கை நியமங்களுடனான பரிந்துரைகளை செய்தல்

ஆணைக்குழுவின் குறிக்கோள்கள்

- மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக திறைசேரியிலிருந்து கிடைக்ககூடிய போதுமான நிதியினை வழங்க பரிந்துரைகளை மேற்கொள்ளுதல்

- சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை இலக்காக கொண்டு மாகாணங்களிற்கிடையே நிதி வளங்களை நியாயமான முறையில் பகிர்ந்தளிப்பு செய்ய பரிந்துரைகளை மேற்கொள்ளுதல்

- அரசியலமைப்பின் பிரகாரம் நிதி ஆணைகுழுவுக்கு வழங்கப்பட்ட கட்டளை செயல்பாடுகளை நிறைவு செய்தல்

1.3. பிரதான செயற்பாடுகள்

அரசியலமைப்பின் கட்டளைச் செயற்பாடுகளுக்கு அமைவாக வருடாந்த பாதீட்டிலிருந்து மாகாணங்களுக்கு போதுமான நிதியினை ஒதுக்கீடு செய்வது சம்பந்தமாகவும் அத்தகைய நிதி எந்தக் கொள்கையின் அடிப்படையில் ஒன்பது மாகாணங்களுக்கிடையில் நாட்டின் சமமான பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்கில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாகவும் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்தல் நிதி ஆணைக்குழுவின் பிரதான தொழிற்பாடாகும்.

இத்தகைய செயல்முறையில் நிதி ஆணைக்குழுவானது;

I. வருடாந்தம் மாகாண சபைகளிற்கான வருடாந்த வளங்களின் தேவைகளை தயாரித்து சமர்பிக்க மாகாணசபைகளுக்கு வழிகாட்டல்களை வழங்குதல்.

II. மாகாண சபை நிறுவனங்களுடனான விரிவான கலந்துரையாடல்களுக்குப் பின்னர் மாகாண சபைகளின் தேவைகளை நியாயமான முறையில் மதிப்பீடு செய்தல்.

III. தேசிய வரவு செலவுத் திட்டத்தில் இருந்து மாகாண சபைகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு மற்றும் மாகாணங்களுக்கிடையில் அத்தகைய நிதிகளைப் பகிர்ந்தளிப்பதற்கான பரிந்துரைகளைச் செய்தல்.

IV. தேசிய பாதீட்டில் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதிக்காக வருடாந்த அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்களை மாகாண சபைகளுக்கு வழங்குதல்.

V. நிதிப் பயன்பாட்டின் வினைத்திறன் மற்றும் செயல்திறனை உறுதி செய்வதற்காக அவர்களின் வருடாந்த அபிவிருத்தி திட்டங்களை வகுக்க மாகாண சபைகளுக்கு உதவுதல்.

1.4 நிறுவனத்தின் பிரதான பிரிவுகள்

ஆணைக்குழுவின் கட்டாய செயல்பாடுகள் மற்றும் நிறுவன செயல்பாடுகளின்படி நிதி ஆணைக்குழு பின்வரும் செயல்பாட்டு மற்றும் துணை சேவை பிரிவுகளுடன் கட்டமைக்கப்பட்டுள்ளது.

- கொள்கை ,கற்கை மற்றும் அறிக்கையிடல் பிரிவு
- மாகாண திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவு
- மீண்டெழும் தேவைகள் மற்றும் ஆளணி மதிப்பீட்டு பிரிவு
- மாகாண வருமான பிரிவு
- நிர்வாக பிரிவு
- கணக்குகள் பிரிவு
- உள்ளக கணக்காய்வுப் பிரிவு

நிதி ஆணைக்குழுவின் பிரிவுகளினுடைய தொழிற்பாடுகள்

நிதி ஆணைக்குழுவின் பிரிவுகளால் மேற்கொள்ளப்படும் குறிப்பிட்ட செயல்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அ. கொள்கை ,கற்கை மற்றும் அறிக்கையிடல் பிரிவு

1. கற்கைகளை மேற்கொள்வதுடன் நிதி ஒதுக்கீடு மற்றும் நிதி பகிர்வு கொள்கை நியமங்களை அடையாளம் காணல்
2. நிதி ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு மேதகு ஜனாதிபதி அவர்களுக்கான பரிந்துரைகளை தயாரிக்க உதவுதல்.
3. நிதி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கைகளை தயாரித்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

ஆ. மாகாண திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவு

1. நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் சேர்ப்பதற்கான மாகாண மூலதனத் தேவைகளை மதிப்பீடு செய்தல்
2. மாகாண வருடாந்த அபிவிருத்தி திட்டங்களை தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்குதல்
3. மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை மீளாய்வு செய்து அமுலாக்குவதற்கு ஒப்புதல்களை வழங்குதல்

இ. மாகாண மீண்டெழும் தேவைகள் மற்றும் ஆளணி மதிப்பீட்டு பிரிவு

1. ஒவ்வொரு மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மாகாண அதிகார சபைகளின் மீண்டெழும் தேவைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் மாகாணங்களுக்கு இடையில் கொடைகளை பகிர்ந்தளித்தல்
2. மாகாணங்களின் தேவைகளின் போது குறைநிரப்பு பாதீட்டு ஒதுக்கீடுகளை பரிந்துரை செய்தல்
3. மாகாண ஆளணியினரை நிர்ணயிப்பதில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் தேசிய சம்பள ஆணைக்குழுவுடன் தொடர்புகளைப் பேணுதல்

ஈ. மாகாண வருமான பிரிவு

1. மாகாண வருமான மதிப்பீடு மற்றும் வருமான இலக்குகளை நிர்ணயித்தல்
2. உள்ளூராட்சி மன்றங்களின் வருமானம் சம்பந்தமான கற்கைகள்
3. ஆர்வமுடைய பங்குதாரர்களுக்கு மாகாண வருமான தகவல்களை சமர்ப்பித்தல

உ. நிர்வாக பிரிவு

1. நிதி ஆணைக்குழுவின் அன்றாட நிர்வாக விடயங்களில் ஈடுபடல்
2. விடுமுறை, காப்புறுதி, மற்றும் பிற கொடுப்பனவுகள் போக்குவரத்து தனிப்பட்ட கோப்பு விஷயங்கள் மற்றும் சொத்துக்களின் பராமரிப்பு.
3. பயிற்சி மற்றும் மனித வள மேம்பாடு


ஊ. கணக்குகள் பிரிவுபிரிவு

1. *நிதி நிலை அறிக்கைகள் மற்றும் அறிக்கையிடல்களை தயாரித்தல்*
2. *நிதிக் கட்டுப்பாடு மற்றும் தகவல்களைப் பராமரித்தல்*
3. *கொள்முதல் நடவடிக்கைகளை (பொருட்கள் பணிகள் மற்றும் சேவைகள்) செயல்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல்.*

எ. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

1. *வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டத்தை தயாரித்தல்*
2. *நிதி ஆணைக்குழுவின் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைவதற்காக வளங்களை வினைதிறனாகவும் மற்றும் செயல்திறனாகவும் நிர்வகிப்பதற்கான உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பின் மதிப்பீடு மற்றும் அத்தகைய கட்டுப்பாட்டு அமைப்புகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை வழங்குதல்*
3. *கொள்கைகள், நடைமுறைகள், சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் போன்றவற்றுடன் ஆணைக்குழுவின் செயல்பாட்டு மற்றும் செயல்பாட்டு நடவடிக்கைகளின் இணக்கத்தை மதிப்பீடு செய்தல் திருத்தங்கள் மற்றும் மேம்பாடுகளுக்கான பரிந்துரைகளை வழங்குதல்.*

1.5 நிறுவன விளக்கப்படம்



பிப/உப - பிரதிப் பணிப்பாளர் /உதவிப் பணிப்பாளர்
நி.உ - நிர்வாக உத்தியோகத்தர்
த.க.தொ.உ - தகவல் கணணி தொழில்நுட்ப உத்தியோகத்தர்
பு .உ - புள்ளிவிபர உத்தியோகத்தர் உத்தியோகத்தர்

உ.ஆ.உ - உதவி ஆராய்சி உத்தியோகத்தர்
அ. உ - அபிவிருத்தி உத்தியோகத்தர்
பொ.மு.உ.சே - பொது முகமைதுவ உத்தியோகத்தர் சேவை
அ.உ.சே - அலுவலக உதவியாளர் சேவை

1.6 நிதி ஆணைக்குழுவின் கீழ் வரும் நிறுவனங்கள்/நிதியங்கள்

நிதி ஆணைக்குழுவின் கீழ் எந்த நிறுவனங்களும் வருவதில்லை. இது அரசியலமைப்பின் 154 (R) பிரிவின் கட்டாய செயல்பாடுகளின் பிரகாரம் நிறுவப்பட்ட ஒரு சிறப்பு நிறுவனம் ஆகும்(சுயாதீன ஆணைக்குழு)

1.7. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் (ஏதும் இருப்பின்).

நிதி ஆணைக்குழுவின் கீழ் வெளிநாட்டு நிதியீட்டத்துடனான கருத்திட்டங்கள் ஏதுமில்லை .

அ) கருத்திட்டத்தின் பெயர் .: பொருத்தமற்றது

ஆ) கொடைவழங்கும் முகவர் : பொருத்தமற்றது

இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு – ரூபா மில். : பொருத்தமற்றது

ஈ) கருத்திட்ட காலம் : பொருத்தமற்றது

அத்தியாயம் – 02 முன்னேற்றங்கள் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1. முன்னேற்றம்

நிதி ஆணைக்குழுவின் கட்டாய செயல்பாடுகளுக்கு ஏற்ப 2022 ஆம் ஆண்டில் 2022 ஆம் ஆண்டின் செயல் திட்ட காலவரயறைக்குள் பின்வரும் முக்கிய செயல்பாடுகளை வெற்றிகரமாகச் செய்தது.

2.1.1 ஆணைக்குழு கூட்டங்கள் தொடர்புடைய விடயங்கள்

2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆணைக்குழு கூட்டங்களின் திகதிகளும் அதில் கலந்துரையாடப்பட்ட விடயங்களும் தீர்மானங்களும் கீழே தரப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

திகதி	கலந்துரையாடப்பட்ட விடயங்கள்	மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களும் குறிப்புக்களும்
28.01.2022	வருடாந்த மாகாண மூலதனத் தேவைகளை மதிப்பிடுவதற்கான வழிகாட்டுதல்கள் -2023	வழிகாட்டுதல்களுக்கு ஆணைக்குழு ஒப்புதல் வழங்கியது
	வருடாந்த மாகாண மீண்டெழும் தேவைகளை மதிப்பிடுவதற்கான வழிகாட்டுதல்கள் - 2023	வழிகாட்டுதல்களுக்கு ஆணைக்குழு ஒப்புதல் வழங்கியது
	மாகாண சபைகளின் கையிருப்பில் உள்ள சிட்டைகள் -2021 (PSDG & CBG)	மேலதிக ஒதுக்கீடுகளை பரிசீலிப்பதற்காக 2021 டிச. 31 ஆம் திகதியன்று கையில் உள்ள சிட்டைகள் பற்றிய தகவல்களை திறைசேரிக்கு அனுப்ப ஆணைக்குழு முடிவு செய்தது. அத்துடன் கைவசம் உள்ள சிட்டைகளை இறுதி செய்ய முன்னுரிமை வழங்குமாறு மாகாண சபைகளுக்கு அறிவிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
09.06.2022	ஒப்புதல்களை வழங்குவதற்காக மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை மீளாய்வு செய்தல் - 2022	மாகாண சபைகளின் நன்கு கட்டமைக்கப்பட்ட வருடாந்த அபிவிருத்தி திட்டங்களை (ADP) தயார்படுத்தும் நடவடிக்கையை ஆணைக்குழு பாராட்டியது.
	2022 ஆம் ஆண்டிற்கான மாகாண மீண்டெழும் தேவைகளுக்கான குறைநிரப்பு ஒதுக்கீடு	2022 ஆம் ஆண்டு வரை மாகாண சபைகளுக்கான குறைநிரப்பு பாதீட்டு பரிந்துரைகளுக்கு ஆணைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.
	மாகாண சபைகளுக்கான பரிந்துரைக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் -2022	2022 ஆம் ஆண்டிற்கான தேசிய வரவு செலவுத் திட்டத்தில் கீழ்நோக்கிய திருத்தங்களைச் செய்யும் பட்சத்தில், 2022 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவு செலவுத் திட்டத்தில் PSDG, CBG மற்றும் BG ஆகியவற்றின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட வரையறுக்கப்பட்ட ஒதுக்கீட்டைக் கழிப்பதைத் தவிர்ப்பதற்கு திறைசேரிக்கு செய்யப்பட்ட பரிந்துரையை ஆணைக்குழு ஏற்றுக்கொண்டது.

	மாகாண சபைகளின் மதிப்பீட்டு செயல்முறை தேவை	மாகாண மூலதனம் மற்றும் மீண்டெழும் தேவை மதிப்பீடு பற்றிய விரிவான குறிப்பு ஆணைக்குழுவின் தகவல்களுக்காகக்காக சமர்ப்பிக்கப்பட்டது.
04.08.2022	2023 ஆம் ஆண்டிற்கான மாகாண மீண்டெழும் மற்றும் மூலதனத் தேவைகளின் பரிந்துரை	சில மாகாண சபைகள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் பராமரிப்பு செலவினங்கள் தொடர்பாக சில சிறிய திருத்தங்களுடன் இந்த பரிந்துரைக்கப்பட்ட தொகைகளை திறைசேரிக்கு சமர்ப்பிக்க ஆணைக்குழு இணங்கியது.
	மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் அரசாங்க பாடசாலைகளின் தகவல்	இந்த தகவல் ஆணைக்குழுவின் பார்வைக்காக சமர்ப்பிக்கப்பட்டது.
15.11.2022	2023 ஆம் ஆண்டுக்கான மாகாண சபைகளுக்கு நிதி வழங்கல்/ஏற்பாடு	ஆணைக்குழு தரவுகளுக்கு ஒப்புதல் அளித்தது
	2022 ஆம் ஆண்டிற்கான மாகாண மீண்டெழும் தேவைகளுக்கான குறைநிரப்பு ஒதுக்கீடு	குறைநிரப்பு ஒதுக்கீடுகளுக்கு ஆணைக்குழு அனுமதி வழங்கியது
19.12.2022	வழிகாட்டுதல்களாவன • 2023 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி திட்டம்தயாரித்தல் • 2023 ஆம் ஆண்டுக்கான பராமரிப்பு திட்டம் தயாரித்தலும் மற்றும் அமுலாக்களும் • பாடசாலை ஊட்டச்சத்து திட்டம்-2023	தேவையான நடவடிக்கைகளுக்காக வழிகாட்டுதல்களை பிரதமச் செயலாளர்களுக்கு அனுப்ப ஆணைகுழு முடிவு செய்தது.

2.1.2 மூலதன பாதீடு தொடர்பான விடயங்கள்

i. **மாகாண மூலதன தேவை மதிப்பீடிற்கான வழிகாட்டுதல்களை வழங்குதல்**

நிதி ஆணைக்குழு அதன் அரசியலமைப்பு கட்டளைக்கு உட்பட்டு மாகாண சபைகளின் நிதித் தேவைகளை வருடாந்தம் மதிப்பிட்டு மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு பரிந்துரைகளை வழங்குகின்றது. அதன்படி, 2023 ஆம் ஆண்டுக்கான மூலதனத் தேவை மதிப்பீடுகளுக்காக வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்பட்டு 2022 ஜனவரி 28 ஆம் திகதி மாகாண சபைகளுக்கு அனுப்பப்பட்டன.

ii. 2022 ஆம் ஆண்டுக்கான மாகாண அபிவிருத்தி திட்டங்களை பரிசீலனை செய்தல்

நிதி ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட வழிகாட்டுதலுக்கு ஏற்ப ***2022 ஆம் ஆண்டுக்கான*** வருடாந்த மாகாண அபிவிருத்தி திட்டங்கள் ஒன்பது மாகாண சபைகளிடமிருந்தும் நிதி ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்றது. ஒவ்வொரு மாகாண சபையின் வருடாந்த மாகாண அபிவிருத்தி திட்டத்தையும் நிதி ஆணைக்குழு கவனமாக ஆய்வு செய்து, பின்னர் ஒவ்வொரு மாகாண சபையுடனும் பின்வருமாறு திட்டமிடப்பட்ட திகதிகளில் zoom தொளில்நுட்பம் மூலம் மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. நிதி ஆணைகுழுவின் தலைவர், சில அங்கத்தவர்கள், செயலாளர், மற்றும் தொடர்புடைய ஏனைய உத்தியோகத்தர்களுடன் தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் தேசிய பாதீட்டு திணைக்கள உத்தியோகத்தர்கள் பிரதம செயலாளர்கள்,மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள்,மாகாண திணைக்கள தலைவர்கள் அடங்கலான ஏனைய பொறுப்பான அதிகாரிகள் மற்றும் கௌரவ வட மத்திய மாகாண

ஆளுநரும், மீளாய்வு கூட்டத்தில் பங்குபற்றினர்.இதன் விளைவாக, மாகாணசபைகளின் நிறுவனகளின் பரஸ்பர இணக்கப்பாட்டின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அபிவிருத்தி திட்டங்களின் பரந்த செயற்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்டது(இது எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டது).

நடத்தப்பட்ட வருடாந்த மீளாய்வு கூட்டங்களின் அட்டவணை கீழே காட்டப்பட்டுள்ளது

கூட்டம் நடைபெற்ற திகதிகள்	**மாகாணம்**
04.03.2022	மத்திய
07.03.2022	தெற்கு
07.03.2022	மேற்கு
08.03.2022	கிழக்கு
09.03.2022	ஊவா
14.03.2022	வடக்கு
15.03.2022	சப்ரகமுவ
16.03.2022	வட மேற்கு
21.03.2022	வட மத்தி

iii. 2023 ஆம் ஆண்டுக்கான மாகாண சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட மாகாண மூலதனத் தேவைகளின் மதிப்பீடு

அடுத்து வரும் வருடத்திற்கான மாகாண சபைகளின் மூலதனத் தேவைகளை மதிப்பிடுவது மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு பரிந்துரைகளை தயாரிப்பதன் முன்நிபந்தனையாகும். எனவே, நிதி ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி பெறப்பட்ட நிதித் தேவைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அதற்கேற்ப மாகாணத் தேவைகள் பற்றிய பொதுவான சாத்தியமான முடிவுகள் இரட்டிப்புத்தன்மை மற்றும் ஒத்த தன்மைகளை தவிர்க்க மேற்கொள்ளப்பட்டன .

iv. 2023 ஆம் ஆண்டிற்கான மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட மூலதன கொடைகள் பற்றி தெரிவிக்கப்பட்டது

2023 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் பாராளுமன்ற ஒப்புதலுக்கு இணங்க தேசிய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட மூலதன கொடைகள் (மா.கு.அ.கொ) - ரூ. 16.9 பில்லியன், பி.அ.கொ - ரூ. 3 பில்லியன் மற்றும் வெளிநாட்டு உதவித் திட்டம் - ரூ. 17.1 பில்லியன்) மாகாண சபைகளுக்கு அறிவிக்கப்பட்டது.

v. 2023 ஆண்டுக்கான அபிவிருத்தி திட்டங்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்கள் (ADP) -

2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை (ADPs) தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்கள் பொருத்தமான படிவங்களுடன் 2022 டிசம்பர் 21 ஆம் திகதி தயாரிக்கப்பட்டு ஒன்பது மாகாண சபைகளுக்கும் அனுப்பப்பட்டன. இவ் வழிகாட்டுதல்கள்2023 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்படும் நிதிப் பயன்பாட்டின் வருடாந்த அபிவிருத்தி திட்டத்தினை தயாரிக்க உதவும் . தேசிய கொள்கை கட்டமைப்பு மற்றும் மாகாணங்களின் அபிவிருத்தி முன்னுரிமைகளின் கீழ் மாகாண சபைகளால் தயாரிக்கப்பட்ட நடுத்தர கால அபிவிருத்தி திட்டங்களுக்கு ஏற்ப ADP கள் தயாரிக்கப்பட வேண்டும்.

vi. 2023 ஆம் ஆண்டுக்கான பராமரிப்பு நடவடிக்கை திட்டம் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்கள்

தேசிய வரவு செலவுத் திட்டத்தில் இருந்து மாகாண சபைகளின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக தனியான ஒதுக்கீடு வழங்குதல் முதன்முதலில் 2022 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு ரூபா 9 பில்லியனும் மற்றும் அதனைத் தொடர்ந்து 15 பில்லியன் ரூபாவும் 2023 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டுக்கான பராமரிப்புச் செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்காக நிதி ஆணைக்குழுவினால் மாகாண சபைகளுக்கு வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டன. சொத்துகளைப் பராமரித்தல் மாகாணத்தின் அபிவிருத்தியுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மூலதன கொடைகளில் உள்ள பற்றாகுறையை கருதிகருத்தில் கொண்டு பொதுமக்களுக்கு நேரடியாகப் பயனளிக்கும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு இந்த ஒதுக்கீடு பயன்படுத்தப்பட உள்ளது

2.1.3 மீண்டெழும் பாதீட்டுடன் தொடர்பான விடயங்கள்

மாகாணங்களின் மீண்டெழும் தேவைகளுக்கான கோரிக்கைகளின் அடிப்படையில் மாகாண மீண்டெழும் தேவைகளுக்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டில் மாகாண மீண்டெழும் மற்றும் ஆளணி மதிப்பீட்டு பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு.

i. 2023 ஆண்டிற்கான மீண்டெழும் பாதீட்டு வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன

மீண்டெழும் தேவைகள் மதிப்பீடு தொடர்பான வழிகாட்டுதல்கள் 2022, ஜனவரி 28 அன்று மாகாண சபைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டதுடன் இச் செயல்முறை ஆரம்பிக்கப்படுகின்றது .

இவ் வழிகாட்டுதல்கள் அரசியலமைப்பின் 13 வது திருத்தங்கள் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க வழங்கப்பட்டுள்ளன. இந்த வழிகாட்டுதல் முக்கியமாக மாகாணங்களின் தனி நபருக்கான சம்பளங்கள், ஏனைய மீண்டெழும் செலவுகள், உள்ளூராட்சி அதிகார சபைகளின் மாற்றல்கள் மற்றும் மாகாணங்களின் வருமான மதிப்பீடுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது. இதற்கு மேலதிகமாக, கொடைகளுக்கான கோரிக்கைகளை முன்வைப்பதற்கு, மாகாணங்களால் நிரப்பப்பட வேண்டிய தொடர்புடைய படிவங்களின் தொகுப்பும் அனுப்பப்பட்டது.

ii. 2023 ஆம் ஆண்டிற்கான மாகாண மீண்டெழும் தேவைகளின் மதிப்பீடு

வழிகாட்டுதல்களுடன் இணைக்கப்பட்ட நாட்காட்டியினடிப்படையில், மாகாணங்கள் தங்கள் தேவைகளை முறையாக பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களில் நிதி ஆணைக்குழுவிற்கு அனுப்பியது. இதன் விளைவாக, 2023 ஆம் ஆண்டிற்கான மாகாண மீண்டெழும் தேவைகள் மாகாண நிறுவனங்களுடன் கலந்துரையாடி மதிப்பீடு செய்யப்பட்டது, இந்நோக்கத்திற்காக பிரதம செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் பாதீட்டு பணிப்பாளர்கள் உட்பட மாகாண அதிகாரிகளுடன் பல சந்திப்புகள் நடைபெற்றது. தேசிய பாதீட்டு திணைக்களம், தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கூட்டங்களில் பங்குபற்றினர். (தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக அனைத்து கூட்டங்களும் ஜூம்(zoom) தொழில்நுட்பம் மூலம் நடத்தப்பட்டன.)

மீண்டெழும் செலவினத் தேவைகளுக்காக நடத்தப்பட்ட வருடாந்த பாதீட்டு கலந்துரையாடல்களின் அட்டவணை கீழே காட்டப்பட்டுள்ளது.

கலந்துரையாடல்களின் திகதி மற்றும் நேரம்	**மாகாணம்**
16.06.2022	மேற்கு
17.06.2022	தெற்கு
20.06.2022	கிழக்கு
21.06.2022	மத்திய
22.06.2022	ஊவா
23.06.2022	சபரகமுவ
28.06.2022	வடக்கு
29.06.2022	வட மத்திய
30.06.2022	வட மேற்கு

iii. **மாகாணங்களின் மீண்டெழும் தேவைகள் குறித்த பரிந்துரைகளை திறைசேரிக்கு தெரிவித்தல்**

மாகாணங்களுடனான கலந்துரையாடலின் பின்னர், *2023* ஆம் ஆண்டுக்கான தேசிய வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக பொது திறைசேரிக்கு அனுப்புவதற்கு முன்னர் மாகாண மீண்டெழும் தேவைகள் இறுதி செய்யப்பட்டு நிதி ஆணைக்குழுவின் அனுமதிபெறப்பட்டது.. பரிந்துரைக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் ரூபா. *450,123* மில்லியன். *(*வருவாய் மாற்றல்கள் எதிர்பாராத நிதி ,முற்பணகணக்கு *B* உட்பட*)* என *10.08.2022* அன்று திறைசேரிக்கு தெரிவிக்கப்பட்டது .

iv. **மாகாணங்களுக்கென ஒதுக்கப்பட்ட தொகைகளை அறிவித்தல்**

2023 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் ஒப்புதலுக்கு இணங்க தேசிய வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்ட மொத்த மீண்டெழும் செலவு ரூபா *410,297* என நிதி ஆணைக்குழு *22.11.2022* அன்று மாகாணசபைகளுக்கு அறிவித்தது.

v. ***2022* ஆம் ஆண்டிற்கான குறைநிரப்பு பாதீட்டு பரிந்துரைகள்**

பொது நடவடிக்கைகள் தவிர மாகாண சபையினால் பாதீட்டு ஒதுக்கீடுகளுக்கு பின்னர் நிரலமைச்சுக்களினால் நேரடியாக இணைத்துக்கொள்ளப்பட்ட ஆளணி மற்றும் புதிய நியமனங்களால் குறைநிரப்பு பாதீட்டு ஒதுக்கீடுகளுக்காக விடுக்கப்பட்ட கோரிக்கைகள் பொது திறைசேரிக்கு மாகாணங்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக பரிந்துரைக்கப்பட்டது. பரிந்துரைக்கப்பட்ட தொகைகள் பின்வருமாறு

(ரூ'000)

திகதி	பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான குறைநிரப்பு பரிந்துரைகள்	நிரல் அமைச்சின் இணைப்புக்களுக்கான குறைநிரப்பு பரிந்துரைகள்	புதிய பரிந்துரைகள்	மொத்த பரிந்துரைகள்
2022.03.19		51,319		51,319
2022.05.18		112,156	24,737,640	24,849,796
2022.11.14	340	661,927		662,267
2022.11.22			2,784,289	2,784,289
மொத்தம்	**340**	**825,402**	**27,521,929**	**28,347,671**

vi. 2023 ஆம் ஆண்டிற்கான மாகாண வருமான மதிப்பீடு

2023 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் வழிகாட்டுதல்களுடன் வழங்கப்பட்ட E படிவம் மாகாண சபைகளால் பூர்த்தி செய்யப்பட்டு நிதி ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. மாகாண சபைகள் வழங்கிய மாகாண வருவாய் இலக்குகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டிற்கான வருவாய் இலக்குகள் நிதி ஆணைக்குழுவால் மதிப்பிடப்பட்டன

2023 ஆம் ஆண்டிற்கான மாகாண மீண்டெழும் தேவைகளை மதிப்பிடுவதற்காக, பிரதம செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் பாதீட்டு பணிப்பாளர்கள் உட்பட மாகாண அதிகாரிகளுடன் வருடாந்த வரவு செலவுத் திட்ட கலந்துரையாடல் கூட்டங்கள் நடைபெற்றன. இக்கூட்டங்களில் மாகாண சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட மாகாண வருவாய் இலக்குகள் மீளாய்வு செய்யப்பட்டு இறுதி செய்யப்பட்டன. நிதி ஆணைக்குழு 2023 ஆம் ஆண்டுக்கான மாகாண வருவாயை, ஒப்புக்கொள்ளப்பட்ட மாகாண வருவாய் இலக்குகள் மற்றும் இறைக் கொள்கைத் திணைக்களத்தால் மதிப்பிடப்பட்ட அரசாங்க வருமான பரிமாற்றங்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்தது.

மாகாண சபைகளுக்கான திரள் மானியம் மாகாணத்தின் மீண்டெழும் தேவையிலிருந்து மாகாண வருவாயைக் கழிப்பதன் மூலம் கணக்கிடப்படுகிறது.

2.1.4 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2021 ஆம் ஆண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் ஊடாக பொது நிதித் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட படிவத்தின் படி 2022 ஜூன் 16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கையில் நிறுவனத்தின் பின்னணி, அதன் முக்கிய செயல்பாடுகள், நிதி முன்னேற்றம் மற்றும் இணக்க அறிக்கை தொடர்பான நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயல்திறன் ஆகியவை அடங்கும்.

2.1.5. மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு சமர்பிக்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பான விடயங்கள்

I. 2023 ஆம் ஆண்டுக்குரிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு சமர்பித்தல்

அரசியலமைப்பின் உறுப்புரை 154 R பிரிவின்படி, நிதி ஆணைக்குழு மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வருடாந்த தேசிய வரவுசெலவுத் திட்டத்தில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்தல் மற்றும் நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்குடன் ஒன்பது மாகாணங்களுக்கு இடையில் அத்தகைய நிதிகளை பகிர்ந்தளித்தல் சம்பந்தமாக பரிந்துரைகளை வழங்குதல் வேண்டும் . அதன்படி, பல ஆலோசனைகளுக்குப் பின்பு, 2023

நிதியாண்டுக்கான பரிந்துரைகள் மூன்று மொழிகளிலலும் தயாரிக்கப்பட்டு மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு ஒக்டோபர் 07, 2022 அன்று சமர்ப்பிக்கப் பட்டது

அரசாங்கம் எதிர்கொள்ளும் எதிர்பாரத நிதி நெருக்கடியின் பின்னணியில், நிதி ஆணைக்குழு தனது பரிந்துரைகளில் மாகாண மட்டங்களில் வள ஒதுக்கீடு மற்றும் பயன்பாட்டின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான சில முன்மொழிவுகளையும் முன்வைத்துள்ளது. கடந்த காலங்களில் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட பரிந்துரைகளில், அதிக செலவின்றி நடைமுறைப்படுத்தக்கூடியவை பெரும்பாலானவை கூட நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை ஆணைக்குழு அவதானித்ததால், முன்னர் செய்யப்பட்ட சில முக்கியமான பரிந்துரைகளும் அந்த அறிக்கையில் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டிற்காக நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு செய்த முன்மொழிவுகளின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

01 ம் முன்மொழிவு

முதல் முன்மொழிவு தற்போதுள்ள வள உறைக்குள் மாகாண சபைகளுக்கு அதிக வளங்களை வழங்குவதாகும். நிதி ஆணைக்குழுவானது அதிகாரப் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களுக்கான (அரசியலமைப்பின் 9 ஆவது அட்டவணையின் பட்டியல் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது) நிரல் அமைச்சுக்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்குவதைத் தவிர்க்குமாறும், அந்த வளங்களை மாகாண சபைகளுக்கு ஒதுக்குமாறும் அதிகாரிகளிடம் கோரியுள்ளது. இவ் விபரம் கடந்த ஆண்டிலும் ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது, பல சமயங்களில் இதுபோன்ற திட்டங்கள்/செயல்பாடுகளை செயல்படுத்துவதற்கு நிரல் அமைசுக்களுக்குச் சொந்த பொறிமுறை இல்லாததால், பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களுக்கான நிரல் அமைச்சுக்களுக்கு நிதி ஒதுக்குவது பொருத்தமற்றது என்பதை எடுத்துக்காட்டுகிறது. மாகாண மட்டத்தில் அதே சமயம் மாகாண சபைகள் ஒரு விரிவான நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்டிருக்கின்றன, அது பல ஆண்டுகளாக உருவாகி வருகின்றது.

02 வது முன்மொழிவு

அரசியலமைப்பின் உறுப்புரை 154R (5) பிரிவில் உறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்பார்க்கப்படும் சமச்சீர் பிராந்திய வளர்ச்சியை அடையும் நோக்கில் மிகவும் தகுதியான பகுதிகள்/துறைகளுக்கு நிதி திருப்பி விடப்படுவதை உறுதி செய்வதற்காகவும், ஒட்டுமொத்த வள ஒதுக்கீடு மற்றும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்காகவும் செயல்பாடுகளின் இரட்டிப்பு தன்மை மற்றும் ஒத்த தன்மை இருப்பதைத் தவிர்ப்பதற்காகவும், ஒரு சக்திவாய்ந்த சுயாதீன நிறுவனத்தை நிறுவ முன்மொழியப்பட்டது.

03 வது முன்மொழிவு

இவ்வாண்டுக்கான மீளுருவாக்கப்பட்ட பாதீட்டில் முன்மொழியப்பட்ட ஆளணி மீளாய்வினை மேற்கொள்வது நீண்ட கால தாமதம் என்று நிதி ஆணைக்குழு முன்மொழிந்துள்ளது . மாகாண பொதுச் சேவை உட்பட முழு பொதுச் சேவையையும் மறுசீரமைப்பதற்காக, பொதுச் சேவையின் முதல் தரங்களில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, பொதுச் சேவையின் முழு அளவையும் உள்ளடக்கியதான ஒரு விரிவான முன்மொழியப்பட்ட ஆளணி மதிப்பாய்வானது இருக்க வேண்டும் என்று ஆணைகுழு உறுதியாக குறிப்பிட்டுள்ளது..

04 வது முன்மொழிவு

கொடையாளர் நிதியுதவி திட்டங்களை செயல்படுத்துவதற்கு திட்ட அலுவலகங்கள் அமைப்பதை கட்டுப்படுத்த சரியான நேரத்தில் அரசு எடுத்த முடிவை நிதி ஆணைக்குழு வரவேற்றது . திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பயன்படுத்தக்கூடிய மாகாண நிர்வாகக் கட்டமைப்பின் இருப்பு குறித்து கொடையாளர் முகவர் நிறுவனங்களை நம்ப வைப்பது இன்றியமையாதது என்று ஆணைக்குழு அவதானித்து .இது தொடர்பாக அரசாங்கத்தால் உறுதியான கொள்கை முடிவு எடுக்கப்பட வேண்டும் என்று முன்மொழிகிறது, இதன் மூலம் பல்வேறு திட்டங்களுக்கு உதவி பெறுவதற்காண பேச்சுவார்த்தை நடத்தும்போது, மாகாண மட்ட இருப்பிணை செயல்படுத்தும் பொறிமுறையை கொடையாள முகவர்களுக்கு வெளிநாட்டு மூலவள திணைக்களம் இணங்க வைக்கலாம்

05 வது முன்மொழிவு

கடந்த ஆண்டில், நிதி ஆணைக்குழுவினால் ஒதுக்கீட்டுச் சட்டத்தில் மாகாண சபைகளை விசேட செலவின நிறுவன அமைப்பாக ஆக்கி அதன் மூலம் பிரதம செயலாளர்கள் பிரதான பொறுப்பு கூறும் அதிகாரிகளாக நியமிக்கப்பட வேண்டும் என முன்மொழியப்பட்டது. இந்த ஆண்டு பரிந்துரைகளிலும் இந்த முன்மொழிவை செயல்படுத்துவதன் முக்கியத்துவத்தை ஆணைக்குழு மீளவும் வலியுறுத்தியுள்ளது.

06 வது முன்மொழிவு

06வது முன்மொழிவானது, புதிய மருத்துவமனைகள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு நிறுவனங்களைக் அமைத்தல் மற்றும் தற்போதுள்ள அதேபோன்ற நிறுவனங்களை தற்போதைய சூழலுக்கு ஏற்றவாறு விரிவுபடுத்துவதற்கான கொள்கையை மீள்பரிசீலனை செய்ய வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது. இது ஒரு காலதினது தேவை என்று அவதானிக்கப்படுகிறது.

07 வது முன்மொழிவு

அரசாங்க கொடைகளுக்கு எதிராக மாகாண வருமானத்தை நிர்ணயம் செய்யும் தற்போதைய நடைமுறையை அரசாங்கம் தொடரும் பட்சத்தில், மாகாணங்களின் மீண்டெழும் செலவினங்களுக்கு எதிராக வருவாயை நிர்ணயிப்பதை விட மூலதன ஒதுக்கீடுகளுக்கு எதிராக வருவாயை அமைப்பதே மிகவும் பொருத்தமானது என ஆணைக்குழு முன்மொழிந்தது. இதற்கு பதிலீடாக , மாகாண சபைகளின் வருவாயில் 40% ஐ முற்பணக் கணக்கு "B" இல் உள்ள பாரிய இடைவெளியை நிவர்த்தி செய்வதற்கு பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

08 வது முன்மொழிவு

ஆணைக்குழு இந்த முன்மொழிவுகள் மூலம் மாகாண சபைகளுக்கும் நிரல் அமைச்சுக்களுக்கும் அரசியலமைப்பின் 44(1) மூலம் ஒதுக்கப்பட்ட அதிகாரப் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களை மேற்கொள்ளப்படும்போது செயற்பாடுகளின் இரட்டிப்பு தன்மை தவிர்பதற்க்கான சிறந்த வழிகளை முன்மொழிகிறது

09 வது, 10வது மற்றும் 11வது முன்மொழிவுகள்

முன்மொழிவுகள் எண். 9,10 மற்றும் 11 ஆகியவை, மூலதன ஒதுக்கீட்டை மிகவும் செயல்திறனாகவும் வினைதிறனாகவும் பயன்படுத்துவதற்கு நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளுக்கு இடையில் தொடர்ந்து உரையாடல்களை நடத்துவதன் முக்கியத்துவம் பற்றியது.

12வது முன்மொழிவு

மாகாண வருவாய் தொடர்பான 12வது முன்மொழிவு இரண்டு கூறுகளைக் கொண்டுள்ளது.

- *மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான மூலங்களை விரிவுபடுத்துதல் மற்றும் எதிர்கால அரசியலமைப்புத் திருத்தங்களில் பரிசீலிக்கப்பட வேண்டிய மூலங்களின் மீது பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட வரம்புகளைத் தளர்த்துதல்.*

- *மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப பல்வேறு பாராளுமன்ற சட்டங்களின் கீழ் விதிக்கப்பட்ட மற்றும் மாகாண சபைகளால் சேகரிக்கப்படும் வருமான விகிதங்களை திருத்த வேண்டியதன் அவசியம். பொருத்தமான சட்ட விதிகளின் கீழ் அமைச்சரவையின் அந்தந்த அமைச்சர்களால் அந்த விகிதங்களைத் திருத்துவதன் மூலமே செய்யப்படல் வேண்டும்.*

II. 2023 ஆம் ஆண்டுக்கான பரிந்துரைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2023 ஆம் ஆண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக 2022 ஆண்டு ஒக்டோபர் 25 ஆம் திகதி மேதகு ஜனாதிபதி அவர்களால் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவும், பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கவும் அனுமதி கோரி அமைச்சரவைப் பத்திரம் ஒன்று அமைச்சரவைக்கு சமர்பிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் 31ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டது. அவை 2022 நவம்பர் 23 ஆம் திகதி பாராளுமன்றதில் சமர்ப்பிக்கப்பட்டன.

2.1.6 காலாண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவா குழு கூட்டத்தை நடத்துதல்

கணக்காய்வு முகமைத்துவா திணைக்கள சுற்றறிக்கை எண். 01/2019 மற்றும் 12/01/2019 திகதியிட்ட சுற்றறிக்கை விதிமுறைகளின்படி, 2022 ஆம் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டிற்கும் பின்வரும் திகதிகளில் நான்கு கணக்காய்வு மற்றும் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

- *முதல் காலாண்டு - 23.03.2022*
- *இரண்டாம் காலாண்டு - 29.06.2022*
- *மூன்றாம் காலாண்டு - 28.09.2022*
- *நான்காம் காலாண்டு - 30.12.2022*

2.2 சிறப்பு அடைவுகள்

i. 2023 ஆம் ஆண்டிற்கான நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு சமர்பிக்கப்பட்டதுடன் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவையினால் அனுமதி அளிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

ii. நிதி ஆணைக்குழுவின் வருடாந்த நடவடிக்கை திட்டம், தேவையான பணிகளை நிறைவேற்றுவதற்காக, மூலோபாய திட்டத்திற்கு (2021-2024) அமைவாக மீள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

iii. பாடசாலை ஊட்டச்சத்து உணவு திட்டத்திற்கான வழிகாட்டுதல்கள் - 2023

பாதீட்டு ஒதுக்கீடு ரூ. 16.6 பில்லியன் பாடசாலை ஊட்டச்சத்து உணவு திட்டம் -2023க்காக ஒன்பது மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டது. அதன்படி, 2022 டிசம்பர் 15 ஆம் திகதி ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு, தேசிய பாதீட்டு திணைக்களம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளின் பங்கேற்புடன் கூடிய கூட்டமொன்று வினைத்திறனான மற்றும் திறம்பட அமுல்படுத்துவது குறித்து கலந்துரையாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தக் கூட்டத்தில் பகிரப்பட்ட தகவல்கள் மற்றும் பங்கேற்பாளர்களின் ஆலோசனைகளின் அடிப்படையில், கூட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டபடி பாடசாலை ஊட்டச்சத்து உணவுத் திட்டம் - 2023-ஐ திறம்பட செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்பட்டு 21 டிசம்பர் 2022 அன்று மாகாண சபைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

iv. 2022 இல் பராமரிப்பு நடவடிக்கை திட்டம் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள்

2022 ஆம் ஆண்டுக்கு தேசிய வரவு செலவுத் திட்டத்தில் மாகாண சபைகளின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 9 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி, தேசிய வரவு செலவு திட்டம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களங்களின் பங்குபற்றுதலுடன் 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதி வரை மாகாண சபைகளுடன் தொடர் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

v. சில சீர்திருத்த முயற்சிகளில் நிதி ஆணைக்குழுவின் ஈடுபாடு

அ) ஆணைக்குழுவின் பரிந்துரை எண்.2 க்கு மிகவும் இணையானதாகும். 07 அக்டோபர் 2022 அன்று சமர்பிக்கப்பட்டது , குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால தேசியக் கொள்கைகளை வகுப்பதில் முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய சபையின் துணைக் குழு, கொள்கைத் திட்டமிடலுக்காக அதி சக்தி வாய்ந்த தேசிய நிறுவனத்தை அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகளைத் தொடங்கியுள்ளது. நிதி ஆனைக்குழுவின் தலைவர் செயலாளருடன் இணைந்து உத்தேச நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் தொடர்புடைய கருத்தியல் ஆவண வரைவில் தீவிரமாக ஈடுபட்டதுடன் பின்வரும் இடங்களில் எண்ணக்கரு பத்திரம் இடம்பெற்றது

- *14.12.2022 ஜனாதிபதி செயலகத்தில்*
- *13/01/2023 அலரி மாளிகையில்*
- *07/02/2023 பாராளுமன்றத்தின் குழு அறை எண் 02 இல்*

ஆ) 2022 ஆம் ஆண்டு நவம்பரில் முன்மொழியப்பட்ட "ஆளுமைப் பள்ளிகள்" (school of Governance) குறித்து இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தில் நடைபெற்ற கலந்துரையாடல்களில் தலைவர் பங்கேற்றார்.

2.3 சவால்கள் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

தற்போதுள்ள நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்கு அடுத்த சில வருடங்களில் தொடர்ச்சியான துரித பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கான சவாலை இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ளது. நாடு விரும்பிய பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியை அடைய, பொருளாதாரத்தில் நிலையான வளர்ச்சிக்கு, கிடைக்கக்கூடிய வரையறுக்கப்பட்ட வளங்களை உகந்ததாகப் பயன்படுத்தும் நீண்ட கால மூலோபாயத் திட்டம் தேவைப்படுகிறது. எனவே, குறிப்பாக தொழில் மற்றும் சேவைத் துறைகளில் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதற்கு பங்களிக்கும் பகுத்தறிவுடன் முன்னுரிமை அளிக்கப்பட்ட அபிவிருத்தி தலையீடுகளில் அரசாங்க நிதி முதலீடு செய்யப்பட வேண்டும்.

இச்சூழலில், நிதி ஆணைக்குழுவிற்கு வளங்கள் ஒதுக்கப்படும் போது மாகாணங்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் மாகாண மட்டத்தில் மிகவும் சாத்தியமான அபிவிருத்தி தலையீடுகளை அடையாளம் காண்பதில் முக்கிய பங்கு உள்ளது. அதற்கேற்ப ஆணைக்குழு நாடு முழுவதும் வறுமையின் உயர் மட்டத்தை அவதானித்து பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள சுருங்கல் (உலக வங்கியின் படி) காரணமாக 2023 இல் வறுமை நிலை 25%க்கு மேல் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. உணவுப் பணவீக்கம், வேலை இழப்புகள், மட்டுப்படுத்தப்பட்ட உரம் வழங்கல் மற்றும் பணம் அனுப்புவதில் குறைவு போன்றவற்றால் வறிய குடும்பங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. சமூக உதவி ஓரளவு நிவாரணம் அளித்தாலும், உண்மையான வருமானத்தில் கணிசமான இழப்புகள் ஏற்பட்டால் அது போதுமானதாக இல்லை.

வறிய குடும்பங்களில் உள்ள பாடசாலை மாணவர்களிடையே ஊட்டச்சத்து குறைப்பாடு ஒரு முக்கியமான பிரச்சினையாக உள்ளது, மேலும் இது பாடசாலைகளில் இருந்து மாணவர்களின் இடைவிலகல் விகிதம் மற்றும் பாடசாலையில் குறைவான செயல்திறன் ஆகியவற்றிற்கு வழிவகுத்தது (UNICEF படி). இந்தச் சூழலைக் கண்காணித்த ஆணைக்குழு பாடசாலை சத்துணவு திட்டத்தில் தலையிடுமாறு பிரதம செயலாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. இதன்படி, சுகாதாரம், விவசாயம், கால்நடை உற்பத்தி, உள்நாட்டு மீன்பிடித் துறைகளின் வருடாந்த திட்டங்கள் இந்த திட்டத்திற்கு உதவுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ளன.

அத்தியாயம் 03: 31டிசம்பர் 2022 இல் முடிவடைந்த வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதி செயலாற்றுகை பற்றிய கூற்று

ஏசீஏ- எப்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2022		குறிப்பு	உண்மை நிலை 2022	திருத்தப்பட்ட 2021	
-	**வருமானப் பெறுகைகள்**				
-	வருமான வரி	1	-	-	
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		86,556,000	82,912,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		56,350	111,280	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		3,163,586	3,147,581	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**89,775,936**	86,170,861	
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		**89,775,936**	86,170,861	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		**30,763**	3,087	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		**89,745,172**	86,167,774	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**		-	-	
62,000,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	55,244,066	50,811,429	
34,826,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	28,509,393	25,767,969	ஏசீஏ-2(ii)
1,000,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	764,634	707,312	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
97,826,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**84,518,093**	77,286,710	
	மூலதனம் செலவினம்				
250,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	199,868	460,928	
2,500,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	2,420,941	6,750,874	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
300,000	திறன் விருத்தி	14	206,000	29,092	
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	-	-	
3,050,000	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**2,826,809**	7,240,894	
	வைப்புக் கொடுப்பனவுகள்		65,855	801,775	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		2,998,826	3,123,765	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		**3,064,681**	**3,925,540**	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		90,409,583	88,453,144	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		**(664,410)**	**(2,285,370)**	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		664,410	2,285,370	ஏசீஏ-7
-	**டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி**		-	-	ஏசீஏ-3

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -1

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2022 ரூபா	2021 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	800,202,910	801,008,673
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	9,510,110	9,674,870
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**809,713,021**	**810,683,542**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		9,510,110	9,665,365
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		800,202,910	801,008,673
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	-	-
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	-	9,505
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**809,713,021**	**810,683,542**

